22nd January 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓரளவுக்கு அது உண்மை தான். லஞ்ச வழக்குகள் ருசு இல்லாததன் காரணத்தினலே தள்ளப்படுகின்றன. லஞ்சம் கொடுக்கிறவர்கள் அக்கரையோடு தான் கொடுக்கிருர்கள், தங்களுக்கு தவறுதலாக காரியங்கள் நிறைவேற்றப்படவேண்டுமென்று கொடுக்கிருர்கள். அதனுல் அவர்களிடமிருந்து சான்றுகளை எதிர்பார்க்க முடியாது. ஆகவே, சரியான சாட்சியங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக் கிறது. இருந்தாலும், இதையெல்லாம் ஆராய்ந்து எவ்வளவு தூரம் வழக்குகளை ருசுப்படுத்த முடியுமோ அதில் அரசாங் கமும், அந்த இலாகாவும் கவனம் செலுத்திவருகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : லஞ்சம் என்று சொல்லும்போது அன்பளிப்பு ஒன்று கொடுத்தால் அதற்குக் கூட தண்டனை வழங்கப்படுமா ? அன்பளிப்பு என்ற வகையில் சில இடங் களில் நடக்கிறது. அப்படி கேஸ் கண்டுபிடித்தால் அன் பளிப்பு கொடுத்தேன் என்ருல் அதற்கும் தண்டனை அளிக்கப் படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அன்பளிப்பு என்று ஒரு பட்டம் கொடுத்துவிட்டால் மட்டும் அது விலக்கு ஆகாது.

மாமண்டூரில் பல்லவ காலத்துக் குகைகள்

*** 70 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டத்தில் உள்ள மாமண்டூர் என்ற ஊரின் ஏரிக்குக் கரையாக அமைந்திருக்கும் மலையில் மாமல்லபுரத்தில் இருப்பது போன்ற பல்லவ காலத் துக் குகைகள் இருப்பதால் அவ்வூரையும் வெளிநாட்டுப் பிரயாணிகள் வந்து செல்லும் சிறப்புமிகு இடமாக ஆக்கி விளம்பரப்படுத்துமாறு கோரி வடாற்காடு மாவட்ட வளர்ச்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதா ?

(இ) அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட முடிவு என்ன?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை, ஐயா.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

புலவர் கா. கோவிந்தன் : இந்த மாமண்டூரைச் சுற்றி பல்லவர்கள் வாழ்ந்ததாக பல சான்றுகள் கிடைக்கின்றன. அதுவும் அல்லாமல் காஞ்சிபுரத்திற்கு 4 கல் தொலைவில்தான் அந்த இடம் இருக்கிறது. காஞ்சிபுரத்திற்கு வெளி நாட்டுப் பிரயாணிகள் பெரும் அளவில் வருகிருர்கள். அவர்களுக்கு இதைப்பற்றி சொன்னுல் அவர்கள் சென்று பார்ப்பதற்கு வாய்ப்பு இருக்கும். இதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார் களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : அந்த இடத்திற்குப் போய் வருவதற்கு என்ன ஏற்பாடு செய்யவேண்டுமென்று கனம் அங் கத்தினர் சொன்னுல், அதைப்பற்றி யோசிக்கலாம்.

[22nd January 1964

புலவர் கா. கோவிந்தன்: அப்படி ஒரு இடம் இருக்கிறது என்பதை நல்ல முறையில் விளம்பரப் படுத்தினால், வெளிநாட்டுப் பிரயாணிகள் அதிகமாக வருவார்கள். ஆகவே அந்த விளம்பரத்தைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. கோ. பூவராகன்: அவ்வாறு விளம்பரம் செய்வதில் அரசாங்கத்திற்கு சங்கடம் ஒன்றுமில்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: தமிழகத்தில் இருக்கிற பழம் பெரு இடங்களில் இது ஒன்று என்பதாலும், அங்கே இருக்கிற கல்வெட்டுக்களில் சரித்திர ஆதாரங்கள் இருக்கின்றன என்று கூறப்படுவதாலும், இதில் அரசு தனி கவனம் செலுத்துமா?

கனம் சபாநாயகர்: என்ன ஏற்பாடு செய்ய வேண்டும் என்றுதான் அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்.

(பதில் இல்லை).

Mr. SPEAKER: Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II—DELAY IN RECEIPT OF ANSWERS.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு தினங்களாக நாம் பார்க்கிறோம், கேள்வித் தாளில் கேள்விகள் குறைவாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு ஒதுக்கப்பட்ட ஒரு மணி நேரத்தை நாம் பூராவாகப் பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி சட்டசபைக் காரியாலயத்தில் விசாரித்தபொழுது, ஏராளமான கேள்விகளுக்கு அரசாங்கத்திடமிருந்து பதில்கள் வரவில்லை என்று நான் அறிகிறேன். அது உண்மையாக இருந்தால், கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றிக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேள்வி சம்பந்தப்பட்ட விதிகளைப் பார்க்கும்பொழுது 15 நாட்களில் விடைகளை அனுப்ப வேண்டுமென்று இருக்கிறது. அப்படி 14 நாட்களுக்கு மேலாகியும் விடைகள் வரவில்லை என்றால், துரிதமாக அவற்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER: What steps can we take?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பட்ஜெட் கூட்டம் முடிவதற்குள் அனுப்பப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு விடையளிக்க முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: What steps would the hon. Member suggest?

திரு. மீ. கலியாணசுந்தரம்: அசெம்பிளி விதிகள் இலாக்காக்களையும் கட்டுப்படுத்தும். முதல் அமைச்சர் அவர்கள் எல்லா இலாகா காரியதரிசிகளுக்கும் 14 நாட்களுக்குள் விடைகளை